செய்தி வெளியீடு எண்.851 நாள்.17.11.2009

## பத்திரிக்கைச் செய்தி

"ரேசன் கடையில் பொருள் இல்லை அதிமுக எம்.எல்.ஏ புகார் " என்ற தலைப்பில் 17.11.2009 நாளிட்ட தினமணி நாளிதழில் வெளியாகியுள்ள பத்திரிக்கைச் செய்தி தொடர்பாக கீழ்க்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

சென்னை நகரம் சேப்பாக்கம் மண்டலத்தில் தேவராஜ் தெருவில் செயல்படும் நியாயவிலை அங்காடிகளில் அத்தியாவசிய பொருள்கள் இல்லை என அந்த அங்காடிகளை பார்வையிட்டு திருவல்லிக்கேணி சட்ட மன்ற உறுப்பினர் தெரிவித்துள்ள கருத்து தொடர்பாக இந்த விவரம் தெரிவிக்கப்படுகிறது. திருவல்லிக்கேணி பகுதியில் முனியப்ப தெரு மற்றும் தேவராஜ் தெரு ஆகிய பகுதிகளில் செயல்படும் நியாயவிலை அங்காடிகளில் நவம்பர் மாதம் 16 ஆம் தேதி வரை குடோனிலிருந்து பெறப்பட்ட மற்றும் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்ட அத்தியாவசிய பொருள்கள் விவரம் வருமாறு:

கிலோ/ லிட்டரில்

| வ.எ. | அத்தியாவசிய பொருள் | NA 032 அமுதம் முனியப்ப தெரு அங்காடி (தேவராஜ் தெரு பகுதி ) | |
|---|---|---|---|
| | | நகர்வு | நவம்பர் மாத விநியோகம் |
| 1 | அரிசி | 5000 | 8060 |
| 2 | சர்க்கரை | 2000 | 2086 |
| 3 | மண்ணெண்ணெய். | 1800 | 1458 |
| 4 | கோதுமை | 750 | 807 |
| 5 | து.பருப்பு | 750 | 732 |
| 6 | உ.பருப்பு | 500 | 505 |
| 7 | பாமாயில் | 500 | 812 |
| 8 | மைதா | 250 | 12 |
| 9 | கோதுமை மாவு | 250 | 56 |

இதன் மூலம் மேற்கண்ட நியாயவிலை அங்காடிக்கு நவம்பர் 2009 மாதத்தில் குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்வதற்கு அத்தியாவசிய பொருள்கள் போதுமான அளவு நகர்வு செய்யப்பட்டு குடும்ப அட்டைதாரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வரும். மேலும் நியாயவிலை அங்காடிகளில் அட்டைதாரர்களுக்கு அத்தியாவசிய பொருள்களை போதுமான அளவு இருப்பு வைத்து வழங்கும் வகையில் ஒதுக்கீட்டில் 60% முன்வரவாக முந்தைய மாதத்திலேயேயும் மீதமுள்ள 40% அத்தியாவசிய பொருள்கள் பிரதி மாதம் 20ஆம் தேதிக்குள்ளும் நகர்வு செய்யப்படுகின்றன. மீதமுள்ள 40% , 20-ம் தேதிக்குள் கடைக்கு நகர்வு செய்து அட்டைதாரர்களுக்கு பொருட்கள் விநியோகிக்கப்படும்.

எனவே மாநிலத்தில் பொது விநியோக திட்டத்தின் கீழ் நியாயவிலை அங்காடிகளில் அத்தியாவசிய பொருள்களை போதிய அளவில் இருப்பு வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு எவ்விதச் சிரமமுமின்றி தொடர்ந்து பொருள்கள் வழங்க அத்தியாவசிய பொருள்களை நகர்வு செய்து இருப்பு வைத்துக் கொள்ள சென்னை நகர தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல மேலாளர்களுக்கும் , இணை பதிவாளர்களுக்கும் அவ்வப்போது அறிவுரைகள் வழங்கப்பட்டு வருகிறது.

(ஒம்) க. ராஜாராமன்
ஆணையாளர்

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**